மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, இப்போது அரசாங்கம் ஒருவரை இயக்குநராக நியமித்திருக்கிறது. அதாவது அடிஷனல் கூட்டுப் பதிவாளர் அவர்களை நியமித்திருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, அரசாங்கம் ஒருவரை நியமித்திருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் ரெஜிஸ்டிரார் ஆப் கோவாப்பரேட்டிவ் சொசைட்டீஸ் பலரை டைரக்டர்களாக நியமிக்கலாம், என்று அறிகிறேன். அப்படி அவரால் நியமிக்கப்படுகிறவர்களுக்கு என்ன குவாலிஃபிக்கேஷன் இருக்கவேண்டும்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: அரசு வேறு. பதிவாளர் வேறு. அவர் நியமனம் செய்வது, கடன் வாங்குபவர்களான சிறிய விவசாயிகள், அதாவது 2½ ஏக்கர் நன்செய் அல்லது 5 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளவர்களில், 3 பேரும், தாழ்த்தப்பட்டவர்களில் 3 பேரும், மலை ஜாதியினரில் ஒருவரும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, would there be nomination for ladies in such banks? The Government support the minorities and the weaker section and so I think the women must have representation in such banks?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: Sir, does the hon. Member think that ladies form a weaker section?

திரு. வா. மை. அப்துல் ஜப்பார்: தலைவரவர்களே, இந்த இயக்குநர் பட்டியலில் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, பட்டியல் என்னிடம் இல்லை. ஆனால் இயக்குநர் பட்டியலில் முஸ்லிம்கள் சிலரின் பெயர்களைப் பார்த்ததாக நினைவு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 54-யும் 65-யும் சேர்த்து எடுத்துக்கொள்ளலாம்.

அரசுப் பேருந்துகளில் பயணக் கட்டணங்கள்

* 54 வினா—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசாங்கம் சமீபத்தில் பஸ் கட்டணத்தை உயர்த்தி உள்ளதா?

(இ) ஆம் எனில், அதனால் எதிர்பார்க்கப்படும் வருவாய் எவ்வளவு?

1972 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மாவட்டங்களில், போக்கு வரத்துத் துறை நடத்தும் பேருந்துப் பணிகளைப் பொறுத்த வரையில், பயணக்கட்டண வீதமானது, 1—10—71 முதல், கிலோ மீட்டர் ஒன்றுக்கு 2½ காசிலிருந்து 3 காசாகத் திருத்தியமைக்கப்பட்டது. போக்குவரத்துத் துறை நடத்தும் விரைவுப் பேருந்துப் பணிகளைப் பொறுத்தவரையில் பயணக் கட்டண வீதமானது 1—1—72 முதல் கிலோமீட்டர் ஒன்றுக்கு 3.125 காசிலிருந்து 4 காசாகத் திருத்தியமைக்கப்பட்டது.

(இ) கட்டண வீதங்களை மாற்றியமைத்ததின் பயனுக, ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 114 லட்சம் துறைக்குக் கிட்டும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

* 55 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether it is a fact that enhanced fare in State Transport from 1st January 1972 has affected the collections; and

(b) if so, the steps proposed for restoring the collection level?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ)—ஆம், வசூல் தொகை உயர்ந்துள்ளது.

திரு. கே. ஏ. வகாப்: தலைவரவர்களே, இவ்வளவு அதிகமான லாபம் வருவதாகச் சொன்னுர்கள். அதனுல் இப்போது விரைவு பேருந்துகள் புதிதாக வாங்கப்பட்டு, சிறந்தமுறையில் பராமரிக்கப்பட்டு வருவதுபோல் குறைந்த தூரம் செல்லுகின்ற பேருந்துகளுக்கும் புதுவண்டிகள் கொடுத்து, பிரயாணிகளுக்கு வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, 114 லட்சம் ரூபாய் வருமானம் என்று அமைச்சரவர்கள் சொன்னுர்கள். இப்போது ‘ஆம்னி பஸ்கள்’ ஹை கோர்ட்டின் முடிவினுல் மீண்டும் ஓடத் தொடங்கியிருக்கின்றன. அதனுல் நம்முடைய வருமானம் பாதிக்கப்படுமல்லவா? அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறது?